# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்: 12 இதழ்: 09 செப்டம்பர் 2026 தனிபிரதி ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol:12 Issue No: 09 September 2026 Single Copy Rs.20/- Annual Subscription Rs.200/-



## உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்.

ஏசாயா 38:5

# மனச்சோர்விலிருந்து விடுதலை! வெளிநாட்டில் படிக்க வாய்ப்பு கிடைத்தது!!



என் மகன் மருத்துவம் படிக்க வேண்டும் என நான் விரும்பி, அதற்காக நீட் பயிற்சி வகுப்பிற்கு அவனை அனுப்பினேன். துவக்கத்தில் நன்றாக படித்தான். நாட்கள் செல்லச் செல்ல படிப்பில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டான். ஒரு நாள் என்னிடம், "உங்கள் ஆசையை என்னால் நிறைவேற்ற முடியாமல் போகிவிடும் என பயமாக இருக்கிறது" என சொன்னான். அத்துடன் ஒரு வித மனசோர்வுக்கு உள்ளா னான். அவனுடைய முகமெல்லாம் மாறியது. வாழவே விருப்பம் இல்லாமல், ஒரு உறுதியான நம்பிக்கையில்லாமல், தன்னையே மாய்த்துக்கொள்ள சில முயற்சிகளை எடுத்தான். அதனால் என் மகனை எங்கு இழந்துவிடுவேனோ என பயந்தேன்.

அந்த நேரத்தில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு என் மகனை அழைத்து செல்லும்படி என் தாயார் எனக்கு ஆலோசனை கூறினார்கள். அதன்படி கடந்த ஏப்ரல் மாதம் நானும் என் மகனும் கூட்டத்தில் வந்து கலந்துக்கொண்டோம். கூட்டம் முடிந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் மகனைக் குறித்து சொன்னேன். அப்பொழுது அங்கிள் அரைமணி நேரம் என் மகனிடம் அன்பாக பேசி அவனுக்கு கவுன்சிலிங் கொடுத்தார்கள். மகனுக்கும் ஒரு தெளிவு வந்தது. மகனுக்காக அங்கிள் ஜெபித்துவிட்டு தீர்க்கதரிசனமாக, "இந்த நீட் தேர்வை விட மேன்மையான வேறு ஒரு வாய்ப்பு உனக்கு இருக்கிறது" என சொன்னார்கள். அதன்படி வருகின்ற அக்டோபர் மாதம் Bio System Engineering படிப்பதற்காக மகன் ஜெர்மனிக்கு செல்ல இருக்கிறான். அதற்கான அனைத்து வேலைகளும் இதுவரை நேர்த்தியாக முடியவும் கர்த்தர் இரங்கினார். இலட்சக்கணக்கான பணத்தேவைகளையும் கர்த்தர் சந்தித்தார்.

**மகனை மனஅழுத்தத்திலிருந்து விடுதலையாக்கி வெளிநாட்டிற்கு சென்று படிக்க ஒத்தாசை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். என் மகனுக்காக பாரத்துடன் ஜெபித்து ஆலோசனை தந்த அங்கிள் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.**

**- திருமதி. ஷோபனா, சென்னை.**

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



**Dr. ஜேன் ஜாஷ்வா**

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,**

உங்கள் ஒவ்வொருவரையும் இந்த புதிய மாதத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த புதிய மாதத்தில் கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர் வதிப்பாராக!

பலவிதமான இயற்கை சேதங்கள், அழிவுகள், மனிதனுடைய கொடூரமான செயல்கள் இவற்றின் மத்தியில் நம்முடைய உலகம் சுழன்றுக்கொண்டு இருப்பதை நாம் அறிகிறோம். ஆனால் கர்த்தர் உங்களோடிருந்து, உங்களை ஆசீர்வதித்து, உங்களை பெருகச் செய்வார். எண்ணாகமம் 23:19-23 வரையுள்ள வசனங்களில் பார்க்கிறபடி கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கின்றார். அதை ஒரு மனிதனாலும் திருப்ப முடியாது. அவர் உங்களோடுகூட இருக்கிறார். அதனால் உங்களில் அக்கிரமமோ, குற்றமோ காணப்படுவதில்லை. அவருடைய இராஜகெம்பீரம், அவருடைய பெலன் உங்களுக்குள்ளே இருப்பதால் எந்த மந்திரவாதமும் குறிச்சொல்லுதலும் உங்களுக்கு விரோதமாக செயல்படுவதில்லை. இந்த வாக்குத்தத்தத்தின் படி உங்களை தாங்கி வழி நடத்துவாராக!

கடந்த மாதத்தில் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து கொடுத்தார். குறிப்பாக மாங்கரை கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. எல்லா இடங்களிலும் தேவனுடைய மகிமை வெளிப்பட்டது. கூட்டங்களுக்கு வந்த மக்கள் சந்தோஷமாக திரும்பிச் சென்றனர். இந்த மாதத்தில் திருச்சி, திருநெல்வேலி மற்றும் முசிறியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக

**ஆசிரியர் / வெளியிடுபவர் : Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ. 200/- ஆயுள் சந்தா ரூ. 2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 1500/- ஆயுள் சந்தா ரூ. 15000/-

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 94888 45627
தெலுங்கு : + 91 99445 36343
மலையாளம் : + 91 94889 32937

**E-mail : info@mojindia.org** **Website : www.ministryofjesus.in**

முகவரி : அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003
**Address : Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003**

ஜெபியுங்கள். நீங்கள் அன்பரின் ஊழியத்தின் சார்பாக நடத்தப்படும் கூட்டங்களில் அற்புதங் களை பெற்றிருப்பீர் களானால் உடனடியாக எங்களோடு தொடர்புக் கொண்டு தேவன் தாமே உங்களுக்கு செய்த நன்மைகளை தெரியப் படுத்துங்கள். அநேகருக்கு பிரயோஜனமாக இருக்கும்.

அன்பரின் ஊழியத்தின் எல்லா youtube சேனல்களையும் subscribe செய்து நிகழ்ச்சி களை பாருங்கள். புதிய பாடல்களை கேட்டு மகிழுங்கள்.

உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள், உறவினர்கள் யாராவது, ஊழியத்தில் எங்களோடு இணைந்து பணிபுரிய விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். அன்பரின் ஊழியத்தின் மூலம் சுவிசேஷ ஊழியத்தை செய்ய விரும்புவோரும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.

தொடர்ந்து எங்கள் அப்பாவின் சுகத்திற் காக ஊக்கமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள். பெலவீனங்கள் மத்தியில் உங்கள் ஒவ்வொரு வரையும் நினைத்து ஜெபிப்பதும், தேசத்திற்காக மன்றாடுவதும் அவர்கள் பணியாக இருக்கிறது. இதுவரை எங்களை நேசித்து தாங்கின, உதவின, விசாரித்த உங்கள் ஒவ்வொருவரின் அன்பையும் நாங்கள் மறப்பதில்லை. கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து உயர்த்துவார். தொடர்ந்து எங்களுடைய குடும்பத்திற்காக, ஊழியத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு மாதமும் 1-ம் தேதியன்று நடைபெறுகிற புதிய மாதத்திற்கான ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். Ministry of Jesus youtube சேனல் வாயிலாக மாலை 6:30 மணியளவில் நேரலையிலும் ஒளிபரப்பப்படும். தங்கும் வசதி தேவைப்படுவோர் எங்களை தொடர்பு கொள்ளவும்.

<u>கிறிஸ்துவின் பணியில்</u>

**Dr. ஜேன் ஜாஷ்வா**
*jane@mojindia.org*




**Telugu WhatsApp No**
**+ 91 91770 87860**

**English WhatsApp No**
**+ 91 94889 32937**

**Tamil WhatsApp No**
**+ 91 95004 87059**



# உன் கண்ணீரை துடைத்து உன்னை என்றைக்கும் உயர்த்துவார்!

Dr. ஆனந்த ஸ்திரா

**உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன். ஏசாயா 38:5**
**தேவரீர் உமது ஜனத்தை இரட்சித்து, உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும் அவர்களைப் போஷித்து, அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தியருளும். சங்.28:9**

எனக்கு மிகவும் பிரியமான தேவ ஜனமே! நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மகிமையான நாமத்தில் உங்கள் ஒவ்வொரு வரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கர்த்தர் எனக்குத் தந்த அன்பரின் ஊழியத்தை பல வருடங்களாக நேசித்து, ஊக்கமாய் ஜெபித்து, பலவிதங்களில் ஊழியத்திற்கு உதவி செய்கிற உங்கள் அனைவருக்காகவும் கர்த்தரை மனதார துதிக்கிறேன், ஸ்தோத்தரிக்கிறேன். **உங்களில் அநேகர் இன்றும் என்னை உங்கள் தகப்பனை போல நேசித்து, என்னுடைய மரணப்படுக்கையில் எனக்காக உபவாசம் இருந்து, கண்ணீரோடு ஜெபித்து, எனக்கு பலவிதங்களில் உதவினதற்காக உங்களுக்கு மனமார்ந்த என் நன்றியை கூறிக்கொள்கிறேன்.**

மிகுந்த இரக்கமுள்ள நம் தேவனாகிய கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் இப்பொழுது இருக்கிறதை பார்க்கிலும் ஆயிரம் மடங்கு ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உலகப் பிரகாரமான வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க் கையிலும் ஆசீர்வதிக்கும்படி அனுதினமும் என் ஜெபங்களில், தேவனை நோக்கி மன்றாடி ஜெபிக்கிறேன். அதிசீக்கிரமாய் நடக்கப்போகிற இரகசிய வருகைக்கு முன்பு நாம் வாழும் இந்த கடைசி காலத்தில், உங்கள் அனைவரையும் பரிசுத்த ஆவியானவர் பலப்படுத்தி, விசுவாசத் திலும், வேத வசனத்திலும் காத்து, ஒவ்வொரு நாளும் உங்களை எதிர்த்து வரும் போராட்டங் களையும் ஜெயிக்க வல்லமை தரும்படியாக ஜெபிக்கிறேன். நம்முடைய ஜெபங்கள் ஒருபோதும் வீண்போகாது. அவைகள் **வெளிப்படுத்தல் 8:3**ன்படி ஜெப தூபங்களாக பிதாவின் சிங்காசனத்தில் ஏறெடுக்கப்படு கின்றன. **மல்கியா 3:16**ன்படி பரலோகத்தில் ஞாபகப் புத்தகத்தில் அவை எழுதப்பட்டுள்ளன. அத்துடன் பிலிப்பியர் 4:3ன்படி உங்களது பெயர்கள் ஜீவப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

வேதத்தில் கர்த்தர் பல தேவபிள்ளை களுடைய கண்ணீரை துடைத்து, அவர்களை பெருமைப்படுத்தியுள்ளார், வாழ்வில் உயர்த்தி யுள்ளார், அரசனாக்கியுள்ளார். அதில் யோசேப்பின் வாழ்வில் கர்த்தர் அவனுடைய கண்ணீரை துடைத்து உயர்த்திய விதத்தை இங்கு உங்களுக்கு விளக்கிக் கூறுகிறேன்.

## யோசேப்பின் கண்ணீரை துடைத்து உயர்த்தின தேவன்!

யோசேப்பின் சரித்திரத்தை பாருங்கள். அவன் சிறு வயது முதல் தேவனுக்கு பயந்து தீமையை விட்டு விலகினவன். பாவத்தை வெறுத்தவன். தன் தகப்பனாகிய யாக்கோபின் மீது அளவற்ற அன்பை எப்பொழுதும் வைத்திருந்தவன். அதன் நிமித்தமாக தகப்பனுக்கு பிடிக்காத காரியங்களை அவன் செய்வதில்லை. அவன் சகோதரர்கள் பாவம் செய்தாலும் அவன் பாவம் செய்யவில்லை. எவ்வளவோ அவனை பகடி பண்ணினாலும் அதற்கு இசைந்து போகவில்லை. முடிவில் சகோதரர்கள் ஒன்றுசேர்ந்து, பொறாமையால் அவனை பாழடைந்த குழியில் போட்டுவிட்டனர். தகப்பன் அவனுக்கு அன்புடன் கொடுத்த பல வர்ண அங்கியை கிழித்து இரத்தத்தில் தோய்த்து யோசேப்பு காட்டு மிருகங்களால் கொலை செய்யப்பட்டு விட்டான் என்று பொய் சொன்னார்கள். அதுமாத்திரமல்ல சுதந்திரமாக இருக்க வேண்டியவனை ஒரு அடிமையாக விற்றனர். அந்த இடத்திலும் யோசேப்பு பாவ சோதனையை வெறுத்து வாழ்ந்தான். போத்திபார் மனைவி அவனுக்கு விரோதமாக செய்த சூழ்ச்சியினால் சிறையில் அடைக்கப் பட்டான். அவனை வாரினால் அடித்து பல துன்பங்களுக்கு உள்ளாக்கினர். பல வருடங்கள் கண்ணீரில் வாழ்ந்தான். எனினும் அங்கேயும் தேவன் அவனுக்கு தயை பாராட்டினார். முடிவில் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் அவனை பட்டயத்தினாலோ அல்லது படையினாலோ அல்லது சூழ்ச்சியினாலோ விடுவிக்காமல் ஒரு சாதாரண சொப்பனத்தின் மூலம் 60 நாடுகளை ஆண்ட எகிப்தின் மன்னனை கதிகலங்க வைத்து, யோசேப்பு அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டான். அரண்மனையில் ராஜாவைத் தவிர மற்ற எல்லா அதிகாரிகளையும் விட மேலாக உயர்த்தப்பட்டான், கௌரவிக்கப் பட்டான். **பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி, பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்து தேசம் முழுமைக்கும் அவனை அதிகாரி யாக்கினான். ஆதி.41:41-43** ஆம், கர்த்தர் யோசேப்பின் கண்ணீரை துடைத்ததோடு நின்று விடவில்லை. எகிப்து தேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக உயர்த்தினார்.

இயேசு கெத்சமனே தோட்டத்தில் மிகுந்த கண்ணீர் வடித்தபொழுது பிதாவாகிய தேவன் பலத்த தூதனை அனுப்பி அவரை திடப்படுத் தினார். அதற்கு முன்னே எலியா, மோசேயை அனுப்பி அவர் அனுபவிக்கப்போகிற பாடுகளை முன்னிட்டு, அவரை தைரியப்படுத்தினார். மோசேயின் வாழ்க்கையிலும், சீஷர்களின் வாழ்க்கையிலும், கர்த்தருடைய அநேக தாசர்களின் வாழ்க்கையிலும் இதுபோன்று நடந்துள்ளது.

ஆம் எனக்கன்பானவர்களே! யோசேப்பின் சிறு வயது வாழ்க்கை அனுபவங் கள் எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. சிறு வயதில் நான் அனுபவித்த பல கொடுமைகளின் போது கண்ணீரோடு உறங்க செல்வேன். அப்பொழுது இரவு கனவிலே சர்வ வல்ல தேவன் எனக்கு தோன்றி இருக்கிறார். உடனே எழுந்து தேவனை ஸ்தோத்தரிப்பேன். என்னை துன்பப்

படுத்திய வார்டன்கள் எல்லாம் அன்பற்ற, கொடூரமான மிருகங்களை போன்றவர்கள். அவர்கள் எல்லாரும் இப்பொழுது மரித்து விட்டார்கள். அவர்கள் நரக பாதாளத்தில் இருப்பதை என்னுடைய மரண அனுபவத்தில் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் என்னையோ கர்த்தர் அவர்கள் கரங்களிலிருந்து மீட்டு இப்பொழுது நீங்கள் காண்கிறபடி மிகுந்த ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார். என்னை மீட்ட தேவன் கண்டிப்பாய் உங்களுக்கும் அப்படியே செய்வார். நம்பிக்கையை மாத்திரம் விட்டுவிடாதிருங்கள். **உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார். சங்கீதம் 22:24**

## என் கண்ணீரை துடைத்து உயர்த்தின தேவன்!!

என்னுடைய வாழ்க்கையில் 12 வயது முதல் நான் வடித்த கண்ணீருக்கு அளவேயில்லை. சிறு வயதிலிருந்தே பல சமயங்களில் மரணப்படுக்கையை சந்தித்துள்ளேன். கொடூரங்களை, விபத்துக்களை கடந்து வந்துள்ளேன். தேவனுடைய பிள்ளைகள் என்று பெயரளவில் வாழ்ந்த ஊழியக்காரர்கள் பலர் எனக்கு செய்த துரோகத்தின் நிமித்தமும், ஜாதி, மத, அந்தஸ்து போன்ற துவேஷங்களின் நிமித்தமும் அதிகமாய் நான் கண்ணீர் வடித்துள்ளேன். பவுல் சொல்வது போல எல்லாருக்கும் முன்பாக துடைத்து போடப்படுகிற அழுக்கை போல ஆனேன். எப்பக்கம் திரும்பினாலும் ஆறுதலின்றி தவித்த நாட்கள் உண்டு. **தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம், இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவுமானோம். (1கொரி.4:13)**

என்னுடைய இரண்டாவது மரணத்தில் கர்த்தர் இயேசு எனக்கு பிரத்தியட்சமாய் காட்சியளித்து என் ஆத்துமாவை பரலோகத்திற்கு அழைத்துக் கொண்டு போய் உலக கணக்கின் படி சுமார் 8 மணி நேரம் தம்முடைய பரலோக மகிமையை எனக்கு காண்பித்தார். அதில் ஒரு நட்சத்திரம் சூரியனை விட பல மடங்கு பெரியதாக இருந்தது. விலையுயர்ந்த கற்களை அஸ்திபாரமாய் கொண்ட ஒருபோதும் வாடாத மிகவும் அழகு அழகான நகரங்களையும், ஜீவ விருட்ச மரங்களையும் அங்கே கண்டேன். அந்த மரங்களின் கிளைகளில் எல்லாம் நாம் கிறிஸ்துமஸ் மரத்தில் வைக்கிற ரசக்குண்டுகள், பெரிய பெரிய ரத்தின கல் மற்றும் ஜாஸ்பர் போன்ற குவளைகளை நான் கண்டேன். அவைகளை நான் சற்று உற்று நோக்கும் பொழுது, அன்பு தேவ மக்கள் ஆத்தும ஆதாயத்திற்காகவும், சுவிசேஷத்திற்காகவும், உத்தியோகத்தில் அவர்களுடைய நேர்மையின் நிமித்தமாகவும், குடும்பத்தில் அவர்களுக்கு வந்த எதிர்ப்புகளின் நிமித்தமாகவும் தெரிந்தோ, தெரியாமலோ அந்தரங்கத்தில் வடித்த ஒவ்வொரு கண்ணீர் சொட்டும் அதை நிரப்பிக் கொண்டிருந்தது. அந்த தேவ மனிதர்கள் உள்ளம் நொறுங்கி மணிக்கணக்காக ஜெபித்ததையும் நான் கண்டேன். அப்பொழுது இயேசு என் மகனே! என்னை ஏற்றுக்கொண்ட மகள் அல்லது மகன் அழும்பொழுது நான் அழாமல் இருப்பேனா? எனக்கு கீழ்ப்படிகிற பிள்ளைகள் எனக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்த பிள்ளைகளின் கண்ணீர், என் நிமித்தமாக சித்ரவதை செய்யப்படுபவர்களின் ஒவ்வொரு கண்ணீர் துளிகளும் துருத்தியில் அல்லவோ இருக்கிறது என்றார்.

பிரியமானவர்களே, பூமியில் நாம் வடிக்கும் கண்ணீர் ஒருபோதும் மறக்கப்படுவது இல்லை. அவைகள் தேவ சமூகத்தில் 24 மணி நேரமும் நினைவு கூறப்படுகிறது. தேவன் உலகத்தில் அவர்களுக்கு நீதி செய்கிறார். அவர்கள் சத்துருக்களை விட அவர்களை மேன்மைப் படுத்தி, யோசேப்பை போல உயர்த்துகிறார். **(ஆதி.45:5,13)** அத்துடன் நித்திய நித்தியமாய் பரலோகத்தில் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதினிமித்தம் உலகில் தாங்கள் அடைந்த துயரத்தை மறந்து விடுகிறார்கள். எத்தனை பெரிய சிலாக்கியம் பாருங்கள். கர்த்தர் தாமே அவர்கள் கண்ணீர் யாவையும் துடைத்து, ஆறுதல்படுத்தி ஆயிரம் மடங்கு அவர்களுக்கு பதில் அளிக்கிறார். எனவே நீங்கள் ஒன்றுக்கும் மனங் கலங்காதீர்கள்! **சிங்காசனத்தின் மத்தியி லிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர் களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீ ருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான். வெளி. 7:17**

தற்பொழுது கடந்த இரண்டு மாதமாக மனதளவிலும், சரீரப் பிரகாரமாகவும் நான் அதிக பாடுகளை அடைந்தேன். என் கண்கள் கண்ணீரின் குளங்களாக மாறியது. ஒரு பக்கம் நன்றாய் ஊழியம் செய்தாலும், இன்னொரு பக்கம் சடுதியான ஆபத்துக்கள், மாரடைப்பு, நுரையீரல் பிரச்சனை, ஊசிகள், மருந்து அலர்ஜிகள், வேதனையான மருத்துவ சிகிச்சை எல்லாம் என்னை அதிகமாய் பாதித்தது. எத்தனை மருந்துகள் எடுத்தாலும் நீங்காத காய்ச்சலால் சரீரம் அதிக பெலவீனம் அடைந்தது. பல சமயங்களில் எந்த வகையான உணவை யும் என்னுடைய சரீரம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே வெறும் கஞ்சி, சூப் மற்றும் சில குறிப்பிட்ட பழச்சாறை மட்டும் தான் அருந்துகி றேன். இந்த இக்கட்டான சமயத்தில் தேவன் என்னை ஆறுதல்படுத்த வந்தார். அக்கினி மயமான இரதத்தில் வந்து என்னிடம் பேசினார். அவரோடு இரண்டு தூதர்களும் வந்தனர். அவர்கள் அந்த பரலோக இரதத்தில் ஒரு தங்க சிங்காசனத்தை எடுத்து வந்து, அதில் அமரும்படி பணித்தனர். அந்த சிங்காசனத்தின் பிரகாசத்தை நம்மால் கணிக்கவே முடியாது. சூரியனுடைய பிரகாசத்தை விட அதிக பிரகாசமாக ஜொலித்தது. ஆனால் அது என்னை சுட்டெரிக்கவில்லை. ஒரு தூதன் என்னை பார்த்து, *"அந்த சிங்காசனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள், உங்களை நாங்கள் அக்கினி இரதத்தில் அழைத்துப் போக வேண்டும்"* என்றார்கள். வானம் திறந்தது, இயேசுவும் அங்கே இருந்தார். *"வா மகனே! உனக்காக நான் காத்திருக்கிறேன்"* என்று கூறினார். இந்த அற்புத காட்சி என் கண்ணீர் யாவையும் துடைத்தது. வேதனையை மறக்கும்படி செய்தது. இயேசு என்னோடு பேசினார்! மகனே! நீ பட்ட பாடுகள் போதும். என்னோடு உன்னை வைத்துக்கொள்கிறேன் என்று அன்பாக கூறினார். என் கண்ணீர் இவ்விதமாக துடைக்கப்பட்ட பின்பு நான் என்னையும் அறியாமல் *"கர்த்தாவே இன்னும் கொஞ்சம் காலம் நிறைய ஆத்துமாக்களை உமக்கென்று நான் ஆயத்தப்படுத்த வேண்டும்"* என்று கூறினேன். தேவ தூதர்களும் மேலே சென்றுவிட்டனர். நான் உயிர் பெற்றேன். இந்த கண்ணீரின் பாதையில் என்னை ஆறுதல்படுத்த கர்த்தர் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட, அன்பான, நன்றி மறவாத தேவ பிள்ளைகள் மூலம் என்னை ஆறுதல்படுத்தினார். தமிழ்நாட்டி லிருந்தும், இன்னும் பிற மாநிலத்திலிருந்தும் பலர் தூரத்தையும் பொருட்படுத்தாமல் என் பிள்ளைகள் போன்று அன்பு செய்கிற பலர் ஓடோடி வந்து என்னை பார்த்து ஆறுதல்படுத்தி சென்றனர். பிற தேசங்களில் இருந்தும், என் சுகவீனத்தை குறித்து கேள்விப்பட்டு, தொலை

பேசி வாயிலாக மிகுந்த கரிசனையுடன் விசாரித்து ஜெபித்தார்கள். இன்றும் என்னை நேசிக்கிற பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு, என் சுக, நலன்களை விசாரித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. தேவனே என்னை உண்மையாக நேசிக்கிற எனக்கும், என் குடும்பத்திற்கும் ஜெபிக்க இத்தனை பேரை வைத்திருக்கிறீர்களே உமக்கு நன்றி என்று சொல்லி என் துக்கத்தை மறந்தேன். இப்படித் தான் கர்த்தர் என் கண்ணீரை துடைத்து என்னை ஆறுதல்படுத்தி வந்திருக்கிறார். இன்னமும் சரீரத்தில் ஏற்படும் மரண வியாதியினாலும், ஆத்தும அறுவடையின் பாரத்தினாலும் நான் இயேசுவை நோக்கி இரவெல்லாம் கண்ணீர் வடிக்கின்றேன். ஒருவருக்கும் கண்ணீர் வெறுமனே வருவதில்லை. உள்ளம் நொறுங்கி தான் வருகிறது. எனவே தான் தாவீது **சங்கீதம் 56:8ல் என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்** எனக் கெஞ்சுகிறான்.

ஆம், பிரியமானவர்களே, நல்ல ஞானம் இருந்தும், நன்கு படித்தும், சிறு சிறு காரியங் களுக்காக என்னை உபத்திரவப்படுத்திய பொல்லாத மனிதர்களின் இரும்பு பிடியிலிருந்து என்னை மீட்ட கர்த்தர் உங்களையும் மீட்பார். தாய் தகப்பன் இல்லாவிட்டாலும், உதவிக்கு யாரும் இல்லாவிட்டாலும் உங்களை மீட்டெடுப்பார். ஏனென்றால் **அவர் உங்களை விசாரிக்கிறவர். (சங்கீதம் 72:4)** அவருடைய கண்கள் எப்பொழுதும் பெருமைப்பிடித்த பணக்காரர்கள் மீது இருப்பதில்லை. மாறாக நொறுங்குண்டு, அவருடைய வசனத்திற்கு நடுங்குகிறவர்கள் மீதே இருக்கிறது. **ஏசாயா 57:15ன்படி "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங் கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக் கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்" "ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்" (ஏசாயா 66:2) (I சாமுவேல் 2:8,9 சங்கீதம் 113:6-9)** பெருமையில் தன்னை தவிர யாரும் இல்லை என்று நினைக்கிற மக்கள், உங்களுக்கு குழந்தை இல்லாததின் நிமித்தம், நீங்கள் எளிமையாக இருக்கிறதின் நிமித்தம் உங்களை ஏளனமாய் நினைக்கலாம். எனினும் கலங்காதீர்கள்! என்னை உயர்த்திய கர்த்தர் உங்களையும் உயர்த்துவார். பிரபுக்களுக்கு முன்பாக உயர்த்துவார். உலக மெங்கும் உங்கள் பெயரை பெருமைப்படுத்து வார். சோர்ந்து போகாதீர்கள்! நீங்கள் எளிதில் புரிந்துக்கொள்வதற்கு உதவியாக, நடந்த ஒரு சம்பவத்தை இங்கு எழுதுகிறேன்.

ஒரு பட்டணத்தில் பெற்றோர் இல்லாத பிள்ளைகள் இருவர் சிறு வயதிலிருந்தே பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார்கள். மிகவும் அழுக் கான வஸ்திரங்களையே அணிந்திருந்தார்கள். அவர்கள் தங்குவதற்கு சரியான ஒரு இடம் கிடையாது. அவர்கள் மீது பரிதாபப்படுகிறவர்கள் அவர்கள் வைத்திருந்த பாத்திரத்தில் பணம் போடுவார்கள். பிள்ளைகள் அந்த பணத்தை எடுத்து பையில் வைத்தப்பிறகு, சில சமயங்களில் மறந்து விடுவார்கள். சில பொறாமைக்காரர்கள் ஏளனம் செய்து, அவர்களிடமிருந்து அந்த பணத்தை பிடுங்கிவிடுவார்கள். சிலர் அந்த பிள்ளைகளை அடிப்பார்கள், உதைப்பார்கள்.

சிலர் அவர்களுடைய முகத்தை தங்கள் நகத்தால் கீறுவார்கள். அவர்கள் அழுகையின் சத்தம் உலகிற்கு தெரியாமல் போனது. ஆனால் அவர்கள் அம்மா, உயிரோடு இருந்தபொழுது அந்த இரு பிள்ளைகளுக்கும் காலை, மாலை தவறாமல் இயேசுவிடம் ஜெபிப்பதற்கு கற்றுக் கொடுத்திருந்தார்கள். அதை அவர்கள் அப்படியே கடைப்பிடித்து வந்தார்கள். ஒவ்வொரு நாள் ஆரம்பிப்பதற்கு முன்பாக தாங்கள் படுத்திருந்த ஒரு பெரிய மரத்தின் அடியில் இணைந்து ஜெபிப்பார்கள். இரவில் தங்களுக்கு கிடைத்த பணத்திற்காக துதித்து பாடுவார்கள். காவல் துறை மக்களை கண்டால் பிள்ளைகள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். சுகாதாரமற்ற நிலையில் பிள்ளைகள் வாழ்ந்து வந்தபடியால் பல வியாதிகள் அவர்களை தாக்கிற்று. தினமும் கண்ணீர் வடிப்பார்கள். இலைகளை தலை யணையாக வைத்து படுத்துக்கொள்வார்கள். அப்பொழுது ஒரு நாள் இயேசு தம்முடைய தூதனை அனுப்பி இரவோடு இரவாக அவர்கள் இருவரையும் தூக்கிக் கொண்டு, சுமார் 500 மைலுக்கு அப்பால் உள்ள ஒரு நல்ல பெரிய வீட்டின் படுக்கை அறையில் தூங்க வைத்து விட்டார். அங்கு முதலாவது எழுந்த பணிப்பெண், படுத்திருந்த பிள்ளைகளை பார்த்து திடுக்கிட்டாள். தனது எஜமானி அம்மாவிடம், *"பேய்கள் நமது வீட்டில் படுத்திருக்கிறது"* என்றாள். எஜமானி அம்மாள் தேவனுக்கு பயந்தவள், அவளும், அவளது கணவரும் கர்த்தருடைய சகல கற்பனைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்கள், சமுதாயத்தில் மதிக்கப்படும் செல்வந்தர்கள். ஆனால் அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. எனவே பணிப்பெண் சொன்னதை கேட்டு, அந்த தாய் சென்று பார்த்தாள். அங்கே இரு பிள்ளை களும் மிக அழகாக படுத்திருந்தனர். பிள்ளை களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த பானத்தை எடுத்துக்கொண்டு வந்து, பிள்ளைகளை மெதுவாக தட்டி எழுப்பி, Good Morning, இயேசு உங்களை நேசிக்கிறார் என்று கூறி, அணைத்து கொண்டாள். பிள்ளைகளுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. ஆனால் இவர்கள் தன் அம்மாவை போலவே அன்பு காட்டுகிறார்கள், இயேசு தான் இறந்து போன அம்மாவை பரலோகத்திலிருந்து அனுப்பியிருக்கிறார் என்று நினைத்தார்கள். பிறகு, அந்த தாய் பணிப்பெண்ணிற்கு பதிலாக, தானே சென்று பிள்ளைகளை குளிக்க வைத்து சரீரத்தில் உள்ள காயங்களை ஆற்றி நல்ல துணியைக் கொடுத்து அள்ளி அள்ளி முத்த மிட்டாள். அவள் கணவரும் வந்து அதே அன்பை காண்பித்தார். பிள்ளைகளால் அதை நம்ப முடியவில்லை. சுமார் 3 வருடம் மரத்தின் நிழலில் நம்பிக்கையற்று கண்ணீரோடு வாழ்ந்த எங்களுக்கா இப்படிப்பட்ட வாழ்க்கை என்று நினைத்தனர். அவர்கள் பள்ளிக்கு போக வஸ்திரங்கள் வாங்கப்பட்டன. விளையாட்டு பொருட்கள் வாங்கப்பட்டன. சிறு பிள்ளைகள் என்னென்ன விரும்புகிறார்களோ அத்தனையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அந்த தேவ மனுஷி அவர்கள் இருவரையும் தன் பிள்ளை களாக ஏற்றுக்கொண்டாள். யார் உங்களை இங்கு கொண்டு வந்துவிட்டார்கள் என்று கேட்ட பொழுது, பிள்ளைகள் நாங்கள் தூங்கும்போது ஒளிமயமான கரங்கள் எங்களை தூக்கிக் கொண்டு வந்து இங்கே போட்டது என்றார்கள். எங்களுடைய பல வருட கண்ணீரின் ஜெபத்திற்கு பின், எங்கள் நிந்தையை நீக்க இயேசு கொடுத்த பிள்ளைகள் நீங்களே என்று கூறி அவர்கள் அகமகிழ்ந்தனர். பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்தனர். இரண்டு பிள்ளை களில் ஒருவர் நீதியரசராகவும், இன்னொரு பிள்ளை மருத்துவராகவும் மாறினார்கள்.

ஆம், எனக்கன்பான தேவ ஜனமே! இதைப்போல, வேதத்திலும் அநேக சிறுமைப் பட்டவர்களை கர்த்தர் தாமே உயர்த்தினதை

பார்க்கிறோம். ஆகவே இன்று உங்கள் கண்ணீரை துடைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் தம்முடைய தாசர்களுக்கும், எனக்கும் செய்தது போல, ஏழை பிள்ளைகளுக்கு செய்தது போல உங்களுக்கும் நிச்சயமாய் செய்வார். விசுவாசமும், பரிசுத்த வேத வார்த்தைகளும் உங்கள் மனதில் இருந்தால் போதும். பணம் பெருத்த, புகழ் பெற்ற வசதி உள்ள மக்கள் தான் நமக்கு உதவி செய்ய வேண்டும் என்றில்லை. பரலோகமே உங்களுக்கு உதவி செய்யும்.

## உங்கள் கண்ணீரை துடைத்து உயர்த்துகிற தேவன்!!!

உலகில் வெளிப்பிரகாரமாய் பார்க்கிற பொழுது விசேஷமாய் பட்டணங்களில் எல்லாருமே சந்தோஷமாக, நல்ல வசதி உள்ளவர்களாக, சிலர் உயர் பதவிகளில், உயர் அந்தஸ்தில் இருப்பவர்களாக, பணக்காரர்களாக, *"கண்ணீர் துக்கம் என்றால் என்னவென்று அறியாதவர்களை போல காணப்படலாம். ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கையில் கண்ணீர் வடிக்கத்தக்கதான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. இவர்கள் தங்கள் முயற்சியாலும், பணத்தினாலும், சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கிற பெயர், புகழினாலும் உயர்ந்த இடத்திற்கு வந்தவர்கள். அவர்கள் என்ன செய்தாலும் அதை கேட்க ஆள் இருப்பதில்லை. அவர்கள் அநீதி செய்தாலும் அது நியாயமாய் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஏனென்றால் பணமும், புகழும், கள்ளத்தனமான சூழ்ச்சியான வார்த்தைகளும், அவர்களுடைய தவறுகளை மறைக்கிறது."* இப்படித் தான் உலகம் சென்றுக் கொண்டிருக்கிறது. இதனால் தான் ஆசா என்னும் மிகப் பெரிய பாடகன் **சங்கீதம் 71:2 முதல் 14 வசனம்** வரைக்கும் வேதனையோடு எழுதுகின்றார்.

இன்றைக்கு மிகப்பெரிய ஜனத்தொகை மத்தியில் உள்ளே புகுந்து கூர்ந்து பார்ப்போம் என்றால் அநேகர் கண்ணீர் வடிப்பதை, பெரும் பணக்காரர்களால், அந்தஸ்தில் இருப்பவர்களால் மிதிக்கப்படுவதையும், வாழ்வில் முன்னேற முடியாமல் தாழ்த்தப்படுவதையும் காணமுடியும். முடிவில் சிலர் தற்கொலைக்கு நேராய் ஓடுவதையும் நாம் அறியலாம். வேறு சிலர் ஏமாற்றப்பட்டு (விசேஷமாக பெண்கள்) காம வெறியர்களால் துரத்தப்பட்டு, சிறு பிள்ளைகள் முதற்கொண்டு வயது வரம்பு இல்லாமல் கொடுமையான முறையில் சீரழிக்கப்பட்டு, கொலை செய்யப்படுவதையும் நாம் காண்கிறோம். எத்தனை வருடமானாலும் அவர்களுக்கு நீதி கிடைக்காத ஒரு தன்மையும், சமுதாய அநீதியும் அவர்களுக்கு இழைக்கப்படுகின்றது. பிறந்த குழந்தை முதல் வாலிப பிள்ளைகள் வரை அனைவருமே சமுதாய அநீதிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இரண்டாவதாக, அநீதியாக நம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களின் நிமித்தம், நமக்கு வரவேண்டிய உயர்வை வருடக் கணக்கில் தடுப்பவர்களின் நிமித்தம், எத்தனை முறை வழக்காடினாலும் நமக்கான நீதி நமக்கு கிடைக்காததின் நிமித்தம், குடும்பத்தில் கணவருடைய நீங்காத குடியின் நிமித்தம், பண்பற்ற செயலின் நிமித்தம், அடங்காத பிள்ளைகளின் நிமித்தம், திடிரென்று ஏற்படுகிற பெரும் கஷ்டங்களின் நிமித்தம், தீராத வியாதிகளின் நிமித்தம், அன்போடு செய்யப்பட்ட நன்மைகளுக்கு பதிலாக தீமை செய்கிறவர்களின் நிமித்தம் ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களின் நிமித்தம் கண்ணீர் வடிக்கக்கூடிய சூழ்நிலையும் உண்டாகிறது.

எனக்கன்பானவர்களே! இன்றைக்கு ஒருவேளை நீங்கள் கடன் பாரத்தினாலோ, கொடிய கேன்ஸர், சிறுநீரகக் கோளாறு, இருதய பிரச்சனை, தீராத நுரையீரல் பிரச்சனை, ஹீமோ, பல மருத்துவர்களால் தீர்வு காண

முடியாத சரீர உபாதைகள், நிலப் பிரச்சனையின் நிமித்தம், கூட இருக்கிறவர்களின் பொறாமையின் நிமித்தம், குடும்பத்தில் மனம் திரும்பாதவர்களின் நிமித்தம், உங்களை எப்பொழுதும் மட்டமாய் நினைக்கிற மக்களின் நிமித்தம் நீங்கள் அழுது கொண்டிருக்கலாம். நிச்சயமாய் கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

பிரியமானவர்களே! கர்த்தருடைய பார்வையில் ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், உயர்குலம், தாழ்ந்த குலம் எல்லாம் ஒன்றுதான். ஒரு அடர்ந்த காட்டில் யாருடைய உதவியும் இன்றி கர்த்தருடைய அழைப்பை பெற்று மிகுந்த வறுமையில் ஊழியம் செய்கிற மிஷனரியும், பொது மேடைகளில் லட்சக்கணக்கான மக்களுக்கு, லட்சக் கணக்கில் செலவழித்து பிரசங்கிக்கிற ஊழியமும் அவருடைய பார்வையில் ஒன்று தான். நம்முடைய ஆண்டவராகிய கர்த்தர் மனிதர்களை போல அவர்களின் முகத்தையும், வெளிப்படையாக அவர்கள் பெற்றிருக்கும் புகழையும் பாராமல் உள்ளத்தை பார்க்கிறார். அவர் உள்ளத்தை பார்க்கிறபடியால் தான் அற்பமாய் எண்ணப்பட்ட யோசேப்பையும், அனாதையான எஸ்தரையும், ஆடு மேய்த்த தாவீதையும், படிக்காத சீஷர்களையும் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு போனார். இது தான் கர்த்தருடைய உள்ளம். **மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். (1 சாமுவேல் 16:7)** ஆகவே, தைரியமாயிருங்கள்! நீங்கள் சிறிய ஊழியம் செய்தாலும் அல்லது பெரிய ஊழியம் செய்தாலும் அல்லது வியாதியாக வீட்டிலிருந்து கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்காய் ஜெபித்தாலும் எல்லாமே தேவனுடைய பார்வையில் மிகவும் அருமையானது, ஏற்றுக்கொள்ளப்படகூடியது. எனவே சோர்ந்து போகாதீர்கள்! கர்த்தர் தாமே யோசேப்பை போல உங்களை உயர்த்துவார். தாழ்த்தப்பட்ட அதே இடத்தில் நீங்கள் மேன்மை அடைவீர்கள். என்னோடு சேர்ந்து கண்ணீரில் வாடும், சிறைக்குள் கிறிஸ்துவுக்காக உபத்திரவப்படுகிற தேவ பிள்ளைகளுக்கும், அனாதைகளுக்கும், கர்த்தருடைய சுவிசேஷ ஊழியத்திற்கும் தொடர்ந்து உதவி செய்கிற உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இன்னும் ஜெபியுங்கள், ஸ்தோத்தரியுங்கள்! இன்னும் ஆத்தும ஆதாயத்திற்காக கடினமாய் உழையுங்கள், ஓடுங்கள். கிறிஸ்து இயேசுவிற்குள் இருக்கின்ற சிந்தையே உங்களுக்குள்ளும் இருப்பதாக! சங்கீதம் 27:1-14; சங்.35:10; சங்.30:1; சங்.25:20-22



# ஊழியம் மற்றும் கூட்டத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான வங்கி கணக்கு விபரங்கள்

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**
**2 கொரிந்தியர் 9:7**

**அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்**

**மணியார்டர் (MO) காசோலை (Cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

இந்த QR Code –ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்






**கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!**

## வங்கிக் கணக்குகளின் விபரம்

| ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS | Dr. ANANDA STIRA |
|---|---|---|
| A/c no. 10848559426 | A/c no. 10848474869 | A/c no. 10848469699 |

**IFS Code : SBIN0000930 State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 9500487061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக் கொள்ளுங்கள். Cell No : 94888 45627, 80987 42638 (10.00 AM - 6.00 PM)

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தைத் தாங்குங்கள்

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி– 620018

# குறுக்கெழுத்துப் போட்டி– 1



## இதற்குரிய சரியான பதில்கள்

1. யோசேப்பு (ஆதியாகமம் 45:7)
2. சிம்சோன் (நியாயாதிபதிகள்15:18)
3. யோனத்தான் (1சாமுவேல் 14:44–45)
4. தாவீது (1சாமுவேல் 19:5)
5. யோவாஸ் (2இராஜாக்கள் 13:14,17)
6. எஸ்தர், மொர்தகாய். (எஸ்தர் 4:13–14)
7. சீயோன் பர்வதம், எருசலேம் (யோவேல் 2:32)
8. யாக்கோபு (ஆதியாகமம் 32:11)
9. மோசே (யாத்திராகமம் 2:19)
10. பேதுரு (அப்போஸ்.12:11)

**கடந்த மாதம் வேதாகம குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள்!**

### வெற்றி பெற்றவர்களின் பெயர்கள்

1. அருள்மேரி செல்லம்மாள்
2. டெய்சி
3. காசியம்மாள்
4. ராஜகுமாரி
5. சந்திரா
6. பிரான்சிஸ் விக்டர்
7. நவீன் லிவிங்ஸ்டன்
8. அனித்தா
9. ஜான் கிறிஸ்டோபர்
10. சுசீலா
11. ஜூலியா சுந்தரஜீவன்



## ஜெபிக்க வாருங்கள்

*வாழ்வில் வெவ்வேறு பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டவர்கள், குடும்ப பிரச்சனை, தீராத நோய்கள் மற்றும் பிசாசின் தொந்தரவுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருச்சி அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்தில் தினந்தோறும் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படும்!*

ஜெபம் : Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
தொடர்புக்கு : 94888 45627

## விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும்
காலை 9.30 மணி – 11.30 மணி

- அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ஆவிக்குரிய தேவ செய்தி
- உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

எவ்விதமான வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்குபெற அன்புடன் அழைக்கின்றோம்

Live @ My Deliverance Church



டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.

# துதி அறிக்கை

## தடை நீங்கியது!
## இடம் சொந்தமானது!!



என் பெயர் ஆபிரகாம். நான் அன்பரின் ஊழிய பங்காளர். 1974-ல் 42 சென்ட் இடத்தை நான் விலைக்கு வாங்கினேன். ஆனால் பத்திரம் எழுதவில்லை. 2014-ல் எனக்கு அந்த இடத்தை விற்ற நபர் இறக்கும் தருவாயில் இருந்தார். அப்பொழுது தன் மகனிடம், ஆபிரகாமிடம் பணம் வாங்காமல் அந்த இடத்தை பத்திரம் செய்து கொடுத்துவிடு என சொல்லியுள்ளார். ஆண்டுகள் கடந்தது. அந்த இடத்தின் காரியம் அப்படியே இருந்தது.

நான் அன்பரின் ஊழியத்திற்கு வந்த பொழுது, ஜெப விண்ணப்பத்தில் அந்த இடம் என் கைக்கு வரவேண்டும், பத்திரப்பதிவு செய்ய வேண்டும் என எழுதிக் கொடுத்துவிட்டு, **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடமும் சொல்லி ஜெபித்து சென்றேன். இந்த வருடம் 2026 ஜூன் 1-ம் தேதியன்று அவருடைய மகன் என்னை அழைத்து அவர்கள் செலவிலேயே என்னுடைய பெயரில் எனக்கு பத்திரப்பதிவு செய்து கொடுத்தார். அந்த நிலம் முழுமையாக எனக்கு சொந்தமானது. இந்த அற்புதத்தை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

**- சகோ. ஆபிரகாம், பெரம்பலூர்.**

## ஆப்ரேஷன் இன்றி
## அற்புத சுகம் கிடைத்தது!



எங்களுடைய உறவினர் பெண் ஒருவருக்கு இருதயத்தின் இரண்டு வால்வு களும் வேலை செய்யவில்லை. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் அந்த பெண்ணிற்காக ஜெபித்துவிட்டு, **"உன்னுடைய வால்வுகள் வேலை செய்யும், உனக்கு ஆப்ரேஷன் வேண்டாம்"** என தீர்க்கதரிசனமாக சொல்லி அனுப்பினார்கள். அதன்படி 15 ஆண்டுகள் ஆப்ரேஷன் இல்லாமல் தேவ கிருபையால் நல்ல சுகத்துடன் வாழ்ந்துவிட்டார்கள். சமீபத்தில் மருத்துவ பரிசோதனைக்கு அவர்கள் சென்றிருந்தப்பொழுது, மருத்துவர்கள் உடனடி யாக open heart surgery செய்ய வேண்டும் என

சொன்னார்கள். உடனே நான் கர்த்தாவே. தீர்க்கதரிசியின் வாயிலாக சொன்ன அந்த வார்த்தையை நிறைவேற்றும் என நானும் பொருத்தனையோடு அவர்களுக்காக ஜெபித் தேன். பிறகு மருத்துவர்கள் மீண்டும் பரிசோதித்துவிட்டு, ஆப்ரேஷன் வேண்டாம் என சொல்லி அனுப்பிவிட்டார்கள். தற்பொழுது அந்த சகோதரி நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

**- திருமதி. மணிமேகலை, பட்டுக்கோட்டை.**

## கட்டி மறைந்தது!

என்னுடைய நெஞ்சில் ஒரு கட்டி இருந்தது. உடனே நான் அன்பரின் ஊழியத் திற்கு கடிதம் எழுதி எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஐயா ஜெபித்து எனக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன்பிறகு கட்டி அப்படியே மறைந்து போனது. அற்புத சுகத்தை தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

**- Sis. ஷைலஜா, கன்னியாகுமரி.**

## பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!

கடந்த மாதத்தில் ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து கலந்துக் கொண்டேன். இறுதி ஜெப வேளையில் **Mrs. மார்கிரேட் ஸ்திரா** அவர்களிடம் எனக்கு வேலை கிடைக்க ஜெபியுங்கள் என்றேன். அம்மா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். நானும் பொருத் தனையோடு ஜெபித்து வந்தேன். ஆண்டவர் எனக்கு அரசாங்க வேலை கிடைக்க உதவி செய்தார். என்னுடைய முதல் மாத சம்பளத்தை அன்பரின் ஊழியத்திற்கு பொருத்தனை காணிக்கையாக தருகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். **- Sis. இளமதி, ஈரோடு.**


நாகர்கோவிலில்

அற்புத ஆராதனை பெருவிழா

நாள் : அக்டோபர் 19, 20
(திங்கள், செவ்வாய்) அரசு விடுமுறை

நேரம் : காலை 10.00 மணி
முதல் 1.00 மணி வரை

இடம் : YMCA ஹால்
WCC கல்லூரி ரோடு
(ஹோட்டல் விஜயதா அருகில்)
நாகர்கோவில்

- தேவ பிரசன்னத்தை உணரும் ஆராதனை வேளை!
- கருத்தான இறை செய்திகள்!
- விடுதலையின் ஜெப நேரம்!
- அன்றாட வாழ்க்கைக்கான சிறப்பு ஆலோசனைகள்!

இக்கூட்டங்களில் பங்குபெறுகிற ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து ஜெபம் ஏறெடுக்கப்படும். விசேஷமாக 20ம் தேதி அன்பரின் ஊழிய பங்காளர்களின் குடும்பங்களை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கப்படும்.



தொடர்புக்கு : 94888 45627, 99421 66066

தேவ செய்தி: Rev. Dr. A. ஜாஷ்வா & Dr. ஜேன் ஜாஷ்வா




## செப்டம்பர் மாதத்திற்குரிய

# தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

1 உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன். (2 இராஜா.20:5)

2 நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன். (1 இராஜா.9:3)

3 தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். (வெளி.7:17)

4 இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன். (பிரசங்கி 4:1)

5 நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக. (1சாமு.1:17)

6 நீ கர்த்தருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி, உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால் நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். (2இராஜா.22:19)

7 திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார். (சங்.102:16)

8 அவர்கள் யுத்தத்திலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவர்மேல் நம்பிக்கை வைத்தபடியினால் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார். (1நாளா.5:20)

9 கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, ஜனங்களுக்கு அநுகூலஞ்செய்தார். (2நாளா. 30:20)

10 கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார், கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார். (சங்.6:9)

11 திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார். (சங்.102:16)

12 அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார். (ஏசா.19:22)

13 அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி, அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர். (சங்.21:2)

14 கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். (சங்.69:33)

15 கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார். (ஏசாயா 25:8)

16 உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம். (தானி.9:18)

17 என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. (யோனா 2:7)

18 நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்: (சகரி.12:10)

19 நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன். (சகரி 13:9)

20 நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார். (நீதி.15:29)

21 மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார். என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். (சங்.66:19)

22 நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்.5:16)

23 என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர். (சங்.116:8)

24 நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னைத் தப்புவித்தேன். (சங்.81:7)

25 ஆபத்து நாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக. (சங்.20:1)

26 என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார். (யோனா 2:2)

27 கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். (சங்.37:4)

28 யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். (யோபு 42:10)

29 உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக. (சங்.20:5)

30 என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. (சங்.66:20)

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். ஏசாயா 58:10











★ ஜூலை மாதம் 26ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று சேலம் மாவட்டம் மேட்டுப்பட்டியில் உள்ள, நம் டியூஷன் சென்டரில் படிக்கிற மாணவ மாணவியர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.





★ சர்க்கார் நாட்டமங்கலம், மின்னாம்பள்ளி, எம்பெருமாபாளையம், ஒட்டப்பட்டி போன்ற கிராமங்களிலிருந்து 130க்கும் அதிகமான பிள்ளைகள் வந்திருந்து இந்த நிகழ்வில் பயன் அடைந்தனர்.

★ Bro.ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா அவர்கள் இந்த நிகழ்வுக்கு வந்திருந்த மாணவ மாணவியர்கள் நன்றாக படிப்பதற்கான அறிவுரைகள் மற்றும் உளவியல் சார்ந்த ஆலோசனைகளை கூறி அவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

★ பரிசு பொருட்கள், வாட்டர் பாட்டில், பேனா, பென்சில், ஜாமன்றிபாக்ஸ், நோட்டு புத்தகங்கள் மற்றும் குளியல் சோப்பு, தேங்காய் எண்ணெய், சீப்பு ஆகிய பொருட்களை Bro.ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா அவர்கள் பிள்ளைகள் அனைவருக்கும் வழங்கினார்கள்.

மதிய உணவாக சிக்கன் பிரியாணி, இனிப்பு, கார வகைகளும் கொடுக்கப்பட்டது.

இந்த பணிக்கு மாதந்தோறும் உதவி செய்கிற பங்காளர்கள் அனைவரையும் நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து காப்பாராக!

**ஏழை எளியவர்களுக்கு, சிறு பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

**Bank A/c. Name: S J Saves Trust**
**Account No. 019150310875369**
**Bank Name: Tamilnadu Mercantile Bank**
**Branch: Palakarai, Trichy**
**IFSC Code: TMBL 0000019**
**A/c Type: Current**

# சுவிசேஷகர்கள் தேவை

**சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. (ஏசா.52:7)**

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**

**மத்.28:18-20 (1கொரி.9:16, ரோமர் 10:14,15)**

✦ பிரியமான தேவ ஜனமே! நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற இந்த நாட்கள் கடைசி காலமாக இருக்கிறது. கிறிஸ்துவின் ஒப்பற்ற அன்பை அறியாமல் இருளில் வாழும் மக்களுக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்லக்கூடிய தேவ மக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

✦ இன்னொரு பக்கம் பல நாடுகளுக்கு சுவிசேஷத்தை எளிதில் கொண்டு செல்ல முடியாதபடிக்கு (கடிதம், வாட்ஸ்அப், வெப்சைட், தொலைப்பேசி மற்றும் பத்திரிக்கை) நெருக்கங்கள் பெருகிக்கொண்டே வருகிறதை நாம் அறிவோம். உண்மையான தேவ ஊழியர்கள் அனுதினமும் சந்திக்கிற பாடுகள் ஒரு பக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

✦ ஆனால் எல்லா அதிகாரங்களுக்கும் மேலான அதிகாரத்தை உடையது நம் அன்பின் பரலோக ராஜ்யம். இயேசுகிறிஸ்துவின் மகத்தான இரட்சிப்பைக் குறித்து உலகமெங்கும் சொல்லவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். (அப்.1:8; மத்28:18-20; மாற்கு16: 15-20)

✦ சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் இல்லாவிட்டால் இயேசுவின் அன்பை குறித்து சாதாரண மக்கள் எப்படி கேள்விப்படுவார்கள்? கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷம் யாருக்கும் தீங்கு செய்வதில்லை. எந்த வகையான தீங்கையும் அது கற்றுக் கொடுப்பதுமில்லை.

✦ பல கிராமங்களிலும், பட்டணங்களிலும் கொடிய வியாதியால், தீராத பிரச்சனைகளினால், பிசாசினால் குடும்பத்தில் சமாதானம் இல்லாமல் வாழுகிற மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட மக்களுக்கு நல்ல வழியை காட்டி நடத்துவதற்கு சுவிசேஷகர்களால் மாத்திரமே முடியும். எவ்வளவு கொடிய பிசாசின் பிடியில் இருந்தாலும் இயேசு என்று சொல்லும் ஒரு வார்த்தையில் அவைகள் அனைத்தும் ஓடிப் போகின்றன.

என்னுடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் பெங்களூரில் உள்ள ஒரு பெரிய மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தேவசெய்தியை கொடுத்து கொண்டிருந்தேன். கூட்டத்தின் கடைசி நாளில் கண்ணீர் மல்க ஒரு நபர் ஓடி வந்தார். அவருடைய ஒரு கையில் வடகயிறும், இன்னொரு கையில் கூர்மையான கத்தியும் இருந்தது. அவர் முதலாவது எங்களை தான் கொலை செய்யும்படி வந்திருக்கிறாரோ என்று நினைத்தோம். ஆனால் அவரோ, எனது காலில் விழுந்து, "ஐயா, ஒரு 15 நிமிடம் முன்பு நீங்கள் பேசி இருக்கக்கூடாதா? அதற்கு நான், ஏன் ஐயா என்று கேட்டேன். அவர் மீண்டும் அழுது கொண்டே "என் குடும்பத்தின் பாவம் போக்க, வறுமை நீங்க, சாபங்கள் ஒழிய, மந்திரவாதியின் பேச்சை கேட்டு, எனது 8 வயது மகனை இப்பொழுது தான் சுடுகாட்டிற்கு சென்று நரபலி கொடுத்து

வந்தேன். அவனுடைய தலை துண்டிக்கப்பட்டு, இரத்தம் ஒரு பானையில் ஊற்றப்பட்டது. பல பேய்கள் வந்து, அதை உறிஞ்சி குடித்தன. நான் நடு நடுங்கினேன். திரும்பி வரும் வழியில் உங்கள் செய்தியை கேட்டேன். அப்பொழுது தான் எனக்கு புத்தி வந்தது. ஐயோ மந்திரவாதியின் பேச்சைக் கேட்டு, என் மகனை நரபலி கொடுத்து விட்டேனே என்று சத்தமிட்டு அழுதேன். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே என் பாவம் போக்க, சாபங்கள் நீங்க, நோய்கள், கஷ்டங்கள் தீர இயேசுகிறிஸ்து எனக்காக கொடூரமாக சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்துள்ளார் என்பதை உங்கள் மூலம் அறிந்துக் கொண்டேன். இனி என் பாவத்திற்குரிய பிராயசித்தம் செய்ய நரபலி தேவையில்லை என்பதையும் உணர்ந்தேன். இயேசு என்னை மன்னிப்பாரா?" என்று மனங்கசந்து அழுதார்.

ஆம் எனக்கன்பானவர்களே! சுவிசேஷம் அறிவிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை தயவுசெய்து தெரிந்துகொள்ளுங்கள். மனிதனுடைய ஆத்துமா மிகவும் முக்கியமானது. அதின் மீட்பை யாரும் விலை கொடுத்து வாங்கமுடியாது (சங்.49:7-9) மனுக்குலத்தின் ஆத்துமாவை மீட்டுக் கொள்ளும்படி அவர் ஒருவரே நமக்காக மரித்தார். நம்முடைய கிரியைகளினாலோ அல்லது சடங்காச்சாரங்களினாலோ, தொன்றுதொட்டு மக்களால் நம்பப்படும் பழக்க வழக்கங்களினாலோ மனிதனுடைய ஆத்துமாவை பாதாளத்தின் வல்லமையிலிருந்து மீட்கவே முடியாது.

உலக வாழ்க்கை மரத்தில் தொங்கும் பச்சை இலை போல இருக்கிறது. அது ஒரு நாள் அல்லது சில நாட்கள் பச்சையாக இருக்கும். பிறகு தானே வாடி வதங்கி அழுகிவிடும். இது தான் மனித வாழ்க்கையின் முடிவு. எனவே உலக வாழ்க்கைக்கு அதிக முக்கியம் கொடுக்காமல், கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை செய்ய ஓடி வாருங்கள், தைரியமாயிருங்கள். உண்மையோடு சுவிசேஷ ஊழியத்தை நாம் அனைவரும் சேர்ந்து செய்வோம். நமக்காக பாடுபட்ட கிறிஸ்துவின் ஆத்துமா அப்பொழுது தான் சந்தோஷப்படும்.

உண்மையான சுவிசேஷகர்கள் இயேசுவின் சீஷர்களைப் போல கர்த்தர் தங்களுக்கு காண்பிக்கும் எல்லா இடத்திற்கும் சென்று கிறிஸ்து இயேசுவின் அன்பையும், அவர் தரும் விடுதலையையும், சுகத்தை பற்றியும் அறிவிக்கிறார்கள். அதன்மூலமாக கிறிஸ்துவுக்கு விரோதமானவர்களும் கிறிஸ்துவின் அன்பால் தொடப்படுகிறார்கள். இதன்மூலம் கர்த்தருடைய சபைகள் வளருகின்றன. உதாரணமாக, பாஸ்டர் ஜான் முருகனின் சாட்சியை இங்கு எழுதுகிறேன்.

## அன்பரின் ஊழிய சுவிசேஷ கூட்டத்தின் வாயிலாக இயேசு கிறிஸ்துவினால் தொடப்பட்ட ஒருவரின் அற்புத சாட்சி

**கர்த்தரும் யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும் உன் மீட்பருமாயிருக்கிறதை மாம்சமான யாவரும் அறிந்து கொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 49:26**



என் பெயர் ஜான் முருகேசன். நான் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். சிறுவயதிலிருந்தே எனக்கு கிறிஸ்தவர்களை துளிகூட பிடிக்காது. ஒரு சமயம் கத்தோலிக்க தேவாலயத்தில் வைக்கப்பட்ட இயேசு சிலையின் மீது செருப்பு மாலையை போட்டேன். எங்கள் கிராமத்தில் நான் ஒருவன் மட்டும் கடினமான நபராக ஊரை சுற்றித் திரிந்தேன். என்னை பார்ப்பவர்கள் எல்லாம் பயப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் நடந்து வந்தேன். என்னிடம் கொஞ்சம் கூட ஒரு அன்பு, இரக்கம் என்பதே இல்லை. அந்த அளவிற்கு ஒரு முரடனாக வாழ்ந்து வந்தேன்.

1997-ம் வருடம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பேருந்து நிலையத்திற்கு ஏதேச்சையாக சென்றிருந்தேன். அதன் அருகில்

மிகப்பெரிய அளவில் சுவிசேஷ கூட்டம் ஒன்று நடந்துக் கொண்டிருந்தது. அங்கு என்ன செய் கிறார்கள் என்பதை கூர்ந்து கவனிக்க ஆரம்பித் தேன். என்னோடு பேருந்தில் வந்த ஒரு சிலரையும் அங்கு நான் பார்த்தேன். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் மேடைக்கு வருவதற்கு முன் மழை பெய்துக் கொண்டிருந்தது. அவர் மேடையில் ஏறியவுடன் சிறிய ஜெபம் செய்தார், "இயேசுவின் நாமத்தில் ஒரு சொட்டு மழையும் மைதானத் திற்குள் விழக்கூடாது, மைதானத்திற்கு வெளியே பெய்துக்கொண்டிருக்கிற மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கட்டும்" என்று இயற்கைக்கு கட்டளை கொடுத்தார். அது அப்படியே நடந்தது. கூட்டம் நடந்துக் கொண்டிருந்த மைதானத்தில் ஒரு சொட்டு மழை கூட வரவில்லை. மைதானத்திற்கு வெளியே கனத்த மழை பெய்துக் கொண்டிருந்தது. இதை பார்த்த ஆச்சரியத்தில் நானும் மைதானத் திற்குள் வந்துவிட்டேன்.

ஜெப வேளையில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் வல்லமையோடு ஜெபிக்க ஆரம்பித்த வுடன் அங்கிருந்த பேய்பிடித்த நபர்கள் இயேசுவின் நாமத்தினால் விடுதலையாவதை பார்த்தேன். என்னோடு பேருந்தில் வந்த நபர்களில் ஒரு சிலரை நடக்கமுடியாமல் தூக்கிக் கொண்டுதான் வந்தார்கள். அவர்கள் எல்லாம் சுகமாகி நன்றாக நடப்பதை பார்த்தேன். இவ்வாறு பல அற்புதங்கள் நடந்துக் கொண்டிருந்ததைப் பார்த்து என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. ஐயா அவர்கள் தொடர்ந்து ஜெபிக்க ஜெபிக்க என் மனதிலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அந்த நிமிடமே ஆண்டவரின் தொடுதலை உணர்ந் தேன். என் வாழ்க்கை மாறினது. என்னுடைய கிராமத்தில் உள்ள போதகரிடம் சென்று சத்தியத்தை கேட்டு நன்கு அறிந்துக் கொண்டேன். இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அதன்பின் வேதாகம கல்லூரியில் சேர்ந்து படித்தேன். தற்பொழுது கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்து வருகிறேன். என்னுடைய சபையில் ஏறக்குறைய 300 விசுவாசிகள் இருக்கிறார்கள். என் கிராமத்தில் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்து வருகிறேன். என் வாழ்வை மாற்றிய கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**- போதகர் ஜான் முருகேசன், சேலம்.**

ஆகவே, நீங்கள் குடும்பமாகவோ அல்லது உங்கள் சபையின் மூலமாகவோ, நற்செய்திக் கூட்டத்தை ஒழுங்கு செய்யுங்கள். அது உங்கள் சபை வளர்ச்சியடைய மிகவும் உதவும். அப்படித் தான் ஆதி திருச்சபைகள் கிறிஸ்துவில் வளர்ந்தன. கர்த்தருடைய அப்போஸ்தலர்கள் ஒருவரும் ஒரே இடத்தில் இருக்கவில்லை. பயணம் செய்து கொண்டே இருந்தார்கள். செல்லும் இடமெல்லாம் கிறிஸ்து இயேசுவின் இரட்சிப்பும், சமாதானமும், பலத்த அற்புதங்களும் நடைபெற்றன. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

அன்பரின் ஊழியத்தின் மூலம் ஏராளமான கூட்டங்களை நடத்தி சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டு வருகிறோம். இந்த கூட்டங்களை நடத்துவதற்கு மாதந்தோறும் பல இலட்சங்கள் தேவைப்படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு உங்கள் குடும்பத்தின் சார்பாக காணிக்கைகளை கொடுத்து தாங்குங்கள். அத்துடன் ஊழிய வாஞ்சை உள்ளவர்களுக்கு சுவிசேஷ ஊழியத்தை எப்படி செய்ய வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுக்கிறோம். விருப்பமுள்ளவர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். சுவிசேஷப் பணியில் பங்கு கொள்ளுங்கள்! தாங்குங்கள்! ஆத்தும அறுவடை செய்யுங்கள்!

**மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரேபாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். லூக்கா 15:7**

## சிறுவர் பகுதி

# அழகோ அழகு

குட்டீஸ், உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்.

கவனமாக கேளுங்கள். ஒகே. ரெடியா?

Ireland தேசத்தில் உள்ள ஒரு ஊரில் அழகான குட்டி பிள்ளை இருந்தாள். அவள் பெயர் ஏமி.

அவள் குடும்பத்தில் உள்ளவர் களுடைய கண்களைப் பார்த்தா நீலநிறத்தில் இருக்கும். தலைமுடி தங்க கலர்ல இருக்கும். இந்த ஏமியோட கண் மட்டும் Dark Brown - கருப்பு நிறத்தில் இருந்துச்சு. தலைமுடியும் கருப்பா இருந்துச்சு.



இவளுக்கு இது ஒரு பிரச்சனை யாகவே மாறிப போச்சு

அதைக் குறித்து அதிகமாக யோசிக்க ஆரம்பிச்சாள்

"நம்ப வீட்டில் எல்லாருக்கும் கண் நீலநிறத்தில் இருக்கிறபொழுது, எனக்கு மட்டும் கண் ஏன் இந்த Brown நிறத்தில் இருக்கிறது" என தன் தாயிடம் கேட்டுக் கொண்டே இருந்தா.

தாய்க்கு என்ன சொல்வது என தெரியலை. உடனே "நீ உன்னைப் படைத்த ஆண்டவரிடமே கேள்" என சொல் லிட்டாங்க!



இவளும் தன் அம்மா சொன்னதைப் போல ஜெபிக்க ஆரம்பித்தாள்.

இயேசுவே. "என் கண் மட்டும் ஏன் Brown ஆக இருக்கிறது?

அதை மாற்றுங்கள் "என இரவு தோறும் ஜெபித்தாள்.

காலை எழுந்தவுடன் கண்ணாடி முன் நின்று மாற்றம் தெரிகிறதா என பார்க்க ஆரம்பித்திட்டாள்!

அச்சச்சோ, ஒருமாற்றமும் தெரிய வில்லை.

உடனே தன் அம்மாவிடம் ஓடி வந்து, என் ஜெபத்துக்கு ஆண்டவர் பதில் சொல்லவே இல்லை. கண் அப்படியே Brown ஆகவே இருக்கிறது என முறை யிட்டாள்.

அதற்கு தாய், "ஆண்டவர் No சொல் கிறதும் ஒரு பதில் தான். சந்தோஷமாய் இரு.

உன்னை ஆண்டவர் அழகாக தான் படைத்திருக்கிறார் என்றார்கள்.

பல வருஷங்கள் இப்படியே கடந்தது. அந்த குட்டிப்பிள்ளை ஏமி இப்பொழுது பெரிய பிள்ளையாக மாறிட்டா ஆண்டவர் அவளை

இந்திய தேசத்திற்கு மிஷனெரியாக அனுப்பிட்டாரு.

இந்தியாவிற்கு வந்தவுடன் அவள் இங்கிருக்கிற மக்களைப் பார்த்தாள். அதிர்ந்துப் போயிட்டாள்.



காரணம் நம் நாட்டுல இருக்கிற மக்களுடைய கண்கள் எல்லாம் ஏமியைப் போலவே கருப்பாக இருந்தது. அவள் முடியும் நம் முடியைபோலவே இருந்தது.

எனவே ஏமியும் நம் தமிழ்நாட்டு மக்களைப் போல சுலபமாய் தன்னை மாற்றிக் கொண்டாள்.

அவள் கண்ணும் முடியும் கருப்பா இருந்ததினால் அவளும் ஒரு இந்திய பெண் என்றே பலர் நினைத்தனர்.

அப்பத்தான் ஏமிக்கு புரிந்தது. “இயேசப்பா நீங்க என் கண்ணையும் முடியையும் கருப்பா படைச்சதுக்கு நன்றி” என்று கூறினாள்.

குட்டீஸ், நீங்க எப்படி இருக்கீங்க?

குண்டாக இருக்கிறேன் என சொல்லுறீங்களா?

No, No. நான் மட்டும் எங்க வீட்டுல ஒல்லியா இருக்கிறேன் என சொல்லுறீங் களா?

School-ல நான் ரொம்ப உயரமாக இருக்கிறேன்.

Church-ல நான் மட்டும் குட்டையாக இருக்கிறேன் என சொல்லுறீங்களா?

நான் அழகாவே இல்லை. கட்ட கருப்பா இருக்கிறேன் என யோசிக்கிறீங் களா?

என் friend மாதிரி இல்லையே என யோசிக்கிறீங்களா? எனக்கு முடி குட்டையா இருக்கு. நான் வெள்ளையா இல்லனு நினைக்கிறீங்களா?

இந்த தாழ்வு மனப்பான்மை உங்களுக்கு வரவேக் கூடாது. சரியா குட்டீஸ்?

இனி எதற்காகவும் சோர்ந்து போகாதீங்க.

நம் ஆண்டவர் நம்ப எல்லாரையும் அழகாத்தானே படைத்து இருக்கிறார்!

ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த அழகுக்காக ஸ்தோத்திரம் பண்ணுங்கள்!

ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த நல்ல சுகத்திற்காக ஸ்தோத்திரம் பண்ணுங்கள்!

ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த நல்ல கை, காலுக்காக ஸ்தோத்திரம் பண்ணுங்கள்!

ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த அப்பா, அம்மாவிற்காக ஸ்தோத்திரம் பண்ணுங்கள்!

ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த நல்ல சூழ்நிலைக்காக நன்றி சொல்லுங்க!

இது போதும்! இப்ப கண்ணாடில பாருங்கள்!! நீங்கள் தான் அழகோ அழகு!!!

**நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன். சங்கீதம் 139:14**

**குறிப்பு: அன்பு பெற்றோர்களே, இந்த சிறுவர் பகுதியை உங்கள் பிள்ளைகள் வாசிப்பதற்கும், அறிந்துக்கொள்வதற்கும் உதவி செய்யுங்கள், உற்சாகப்படுத்துங்கள்.**

# உலகச் செய்திகள்

தற்போது வளர்ந்து வரும் மருத்துவத்துறை மற்றும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியானது மனிதனை நோய்களிலிருந்து பாதுகாத்து ஆயுளை அதிகரிக்க உதவுகிறது. இந்த பூமியில் மனிதன் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு பின்பற்ற வேண்டிய சில பழக்கங்கள் என்ன என்பதை இங்கு நாம் தெரிந்து கொள்வோம்.

இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு குறிப்பிட்ட ஆயுள் காலம் உள்ளது. உயிரினங்களின் சராசரி ஆயுள்காலம் அவற்றின் உடல் அமைப்பு, வாழும் சூழல் மற்றும் வளர்ச்சி மாற்றத்தைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக ஆமை இனங்களின் ஆயுள்காலம் 80 முதல் 200 ஆண்டுகள் வரையும், பாம்பு இனங்களின் ஆயுள் காலம் 10 முதல் 25 ஆண்டுகள் வரையும் உள்ளது.

இதேபோல் உலகளவில் மனிதனின் சராசரி ஆயுட்காலம் 70 முதல் 75 ஆண்டுகள் என்றும், மனிதனின் மரபியல், உணவுப் பழக்கம் மற்றும் வாழும் சூழல் என முறையான வாழ்வியல் முறைகள் மற்றும் நவீன மருத்துவ வசதிகளால் அதிகபட்சமாக 100 ஆண்டுகள் வரையும் வாழ முடியும் என்ற நிலை தற்போது உள்ளது. முந்தைய காலங்களில் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறை உள்ளிட்ட காரணங்களால் 100 வயதைத் தாண்டியும் சிலர் வாழ்ந்துள்ளனர்.

1. தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். உடற்பயிற்சி உடலுக்கு வலிமையைக் கொடுக்கும். ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். சுறுசுறுப்பாக இருக்க உதவும்.
   பலன் : உடல் கட்டுக் கோப்பாக இருக்கும். எலும்புகள் வலுவாகும். உடலுக்கு அதிக ஆற்றல் கிடைக்கும்.
2. நல்ல எண்ணங்களை வளர்த்து கொள்ளுங்கள். நேர்மறை சிந்தனை கொண்டிருங்கள்.
   பலன்: மனநலம் மேம்படும். மனஅழுத்தம் குறையும்.
3. உங்களின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நேர்மறை மனப்பான்மை கொண்டவர்களுடன் பழகுங்கள்.
   பலன் : உணர்வு ரீதியான ஆதரவு கிடைக்கும்.
4. நவீன தொழில் நுட்பங்களை கற்றுக்கொண்டு உங்கள் திறன்களை மெருகேற்றுங்கள்.
   பலன் : மூளை செயல்பாடு சுறுசுறுப்பாக இருக்கும். நன்னம்பிக்கை அதிகரிக்கும்.
5. பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள் மற்றும் நல்ல கொழுப்புகள் அடங்கிய உணவை தேர்ந்தெடுங்கள்.
   பலன் : நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், சருமம் பொலிவுறும்.

❖❖❖❖❖❖❖❖

இந்தியாவில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்துக்குச் செல்ல பொதுவாக எந்தவித முன் அனுமதியும் தேவையில்லை. ஆனால், வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், நாகலாந்து, மிசோரம், மணிப்பூர் ஆகிய 4 மாநிலங்களுக்குச் செல்லும் பிறமாநிலங்களைச் சேர்ந்த இந்தியர்கள், “இன்னர் லைன் பெர்மிட்” (ILP) எனப்படும் சிறப்பு அனுமதியைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

ILP என்பது விசா போன்றதல்ல, சுற்றுலாவுக்குத் தடை விதிப்பதும் இதன் நோக்கமல்ல. குறிப்பிட்ட காலத்துக்கு அந்த மாநிலத்திற்குள் சென்று தங்குவதற்கான அரசு அனுமதி மட்டுமே. கட்டணம், அனுமதியின் செல்லுபடியாகும் காலம், விண்ணப்பிக்கும் நடைமுறை ஆகியவை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.

இந்த நடைமுறை 150 ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு. வங்காள கிழக்கு எல்லை ஒழுங்குமுறை மூலம் இன்னர் லைன் அறிமுகப்படுத்தப்பட்டது. பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் வெளி நபர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்
## (New Month Blessing Meeting)

**நாள்: செப்டம்பர் 01 செவ்வாய் கிழமை**
**நேரம் : மாலை 6:00 மணிமுதல் இரவு 8:30 மணி வரை**



**இடம்: டெலிவரன்ஸ் சர்ச்**
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18

**தேவ செய்தி: Rev.Dr.A. ஜாஷ்வா குடும்பத்தினர்**

குறிப்பு :
- கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
- கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்.

தொடர்புக்கு : செல் 99421 66066 & 94888 45627

---

திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

செப்டம்பர் 26 சனிக்கிழமை



காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு
தில்லைநகர், திருச்சி-18

தேவ செய்தி
**Dr. ஆனந்த ஸ்திரா**
குடும்பத்தினர்

தொடர்புக்கு : செல் 9488845627
0431- 2741925

---

# புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்
## (New Month Blessing Meeting)

**நாள்: அக்டோபர் 01 வியாழக் கிழமை**
**நேரம் : மாலை 6:00 மணிமுதல் இரவு 8:30 மணி வரை**

**இடம்: டெலிவரன்ஸ் சர்ச்**
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர்,
திருச்சி-18

தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா & Dr. ஜேன் ஜாஷ்வா
Bro. ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

குறிப்பு :
- கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
- கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்.

தொடர்புக்கு
செல் 99421 66066 &
94888 45627

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

திருநெல்வேலியில்

# அற்புதத்தின் மாலை

நாள் : செப்டம்பர் **14**
திங்கள் கிழமை (அரசு விடுமுறை)

நேரம்: மாலை **5:30** மணி

இடம்: **கிரேஸ் ஹால்**
LIC பில்டிங், புதிய பேருந்து நிலையம் அருகில்
**திருநெல்வேலி**

---

முசிறியில்

# அற்புதத்தின் மாலை

நாள் : செப்டம்பர் **20**
(ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: மாலை **5:30** மணி

இடம் : **வி.ஜ.பி. மஹால்**
வசந்த் அன் கோ அருகில்
துறையூர் ரோடு, முசிறி.



தேவ செய்தி

**Rev.Dr.A. ஜாஷ்வா**
**Dr. ஜேன் ஜாஷ்வா**

- பரவசமூட்டும் ஆராதனை வேளை
- வல்லமையான தேவ செய்தி
- விடுதலையின் ஜெப நேரம்

கூட்ட முடிவில் அனைவருக்கும்
தனித்தனியாக ஜெபம்
ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு
**94888 45627**
**99421 66066**

அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்!

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,